# ‘அம்மா’ கதையில் கணவனால் கொடுமைப்படுத்தப்பட்ட மனைவி

# Wife ill Treated by Husband in the Short Story ‘Amma’

இராஜேஸ்வரி ஆறுமுகம் / Rajeswari Arumugam[1]

*Abstract*

This article focuses on the sufferings of a woman in the hands of her husband from one of the short stories begotten from the anthology of short stories published by the Tamil Society of University Malaya from 1986 to 2009 under the name of ‘Peravaik Kathaikal’. The primary purpose of this article is to identify the woman’s status and her emancipation in the selected short story based on the theory of cultural feminism. Of the 294 short stories published in 25 years, 43 short stories reflect the cultural feminism theory. Among those, nine stories talked about the wives who have been tortured by their husbands. The researcher reveals the struggles faced by a wife in the short story ‘Amma’ and explains how cultural feminism influenced the wife’s thoughts and attitudes.

**Keywords:** Short story, Sociology, Cultural feminism, Family, Women.

## ஆய்வு அறிமுகம்

மலாயா பல்கலைக் கழகத்தின் தமிழ் மொழிக் கழகம் 1986 முதல் 2017 வரை ‘பேரவைக் கதைகள்’ என்ற தலைப்பிலான பரிசு பெற்ற சிறுகதைத் தொகுப்பு நூல்களை வெளியிட்டு வருகிறது. இன்றுவரை 32 தொகுப்பு நூல்களை வெளியிட்டுள்ளது. அவற்றுள் சில கதைகளில் பெண்ணியம் பதிக்கப்பட்டுள்ளது. அத்தகைய கதைகளையே ஆராய்ச்சியாளர் தேர்ந்தெடுத்துக் கணவனால் கொடுமைப் படுத்தப்பட்ட மனைவியைப் பற்றிய கதை ஒன்றை ஆய்வு செய்துள்ளார்.

## முன்னோடி ஆய்வுகள்

சுல்தான் இட்ரீசு கல்வியல் பல்கலைக்கழகத்தில், 21 ஆம் நூற்றாண்டில் மலேசியத் தமிழ் நாவல்களில் பெண்ணியம் (Feminisme dalam Novel Tamil Malaysia abad ke-21) என்ற தலைப்பில், ராஜேஸ்வரி வைரன் (2015) தமது முனைவர் பட்டத்துக்கான ஆய்வை 2015ல் நிறைவு செய்தார். 20002012 வரை மலேசியத் தமிழ் நாவலாளர்களால் எழுதப்பட்ட பெண்ணியம் தொடர்புடைய நான்கு நாவல்கள் அவருடைய ஆய்வுக் களமாக அமைந்தன. பண்புசார் விளக்க முறையில் இவ்வாய்வு அமைந்துள்ளது. ஆண் ஆதிக்கத்திலிருந்து பெண் கதாப்பாத்திரங்கள் விடுதலை பெறுவதை ஆய்வு விளக்குகிறது.

ரினா பெரியசாமி (2014) சுல்தான் இட்ரிஸ் கல்வியல் பல்கலைக்கழகத்தில் முதுகலை ஆய்விற்கு ‘ந.மகேசுவரியின் சிறுகதைகள்: பெண்ணியக் கோட்பாட்டு ஆய்வு’ (Cerpen N.Mageswary: Kajian Theory Feminism), என்ற தலைப்பில் ஆய்வேடு சமர்ப்பித்துள்ளார். மகேசுவரியின் சிறுகதைகளில் பெண்பாத்திர

[1] The author is a PhD candidate at The Tamil Language Programme, Sultan Idris Education University, Malaysia. a_rajeswary@live.com.my

உருவகம் எவ்வாறு உள்ளது என்பதே ஆய்வின் நோக்கமாகும். கதாசிரியரின் எழுத்துத் திறனைக் கொண்டு பெண்களின் போராட்டங்கள் எவ்வாறு சித்தரிக்கப்பட்டுள்ளன என்பதை ரினா விளக்கியுள்ளார். மலேசிய, இந்திய நாட்டுப் பெண்களைக் கதையில் படைக்கப்பட்டவாறு ஒப்பிட்டு, அப்பெண்கள் சமூகத்தில் தங்களுக்குரிய இடத்தைப் போராடிப் பெற்றுள்ளனர், என்று நிரூபனம் செய்கின்றார்.

மற்றுமொரு ஆய்வு புஷ்பநாதன் நாகராஜா (2014) சமர்ப்பித்த மலாயா பல்கலைக் கழக முதுகலைப் பட்டத்துக்கானது. 'ரெ. கார்திகேசுவின் சிறு கதைகளில் பெண்கள்', (Perempuan dalam cerpen R.Karthigesu) என்பதே ஆய்வின் தலைப்பு. புஷ்பநாதானின் கருத்துப்படி, ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பெண்கள் அனைவரும் தந்தைமரபுவழி முறையைப் பின்பற்றும் இந்திய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்; ஆகையால், ஆண்களே குடும்பத் தலைவர்களாகி குடும்பத்தின் உறுப்பினர்களுக்கான அனைத்து முடிவுகளையும் எடுக்கும் உரிமைகளையும் அவர்களே பெறுகின்றனர், என்பதை விளக்குகின்றார்.

அடுத்தப்படியாக, பாமா பெரியசாமி (2014) தமது முதுகலைப் பட்டத்துக்காக மலாயாப் பல்கலைக் கழகத்தில் சமர்ப்பித்த ஆய்வாகும். தேர்ந்தெடுக்கப்பட்ட 'ரமணி சந்திரனின் நாவல்களில் பாலின வார்ப்புகள்' (Gender Stereotype in selected Novels written by Ramani Chandran), என்பது இவரின் ஆய்வுத் தலைப்பாகும். இந்த ஆய்வில், பாலின வார்ப்புக்கு உட்பட்ட பெண்களின் தன்மைகள், அவர்களிடையே ஏற்படும் மாற்றங்கள், காணப்படும் சிறப்புக் கூறுகள் ஆகியனபற்றி விவாதித்துள்ளார்.

மற்றுமொரு ஆய்வு, ரவீந்திரன் மரையா (2012) மலாயாப் பல்கலைக்கழகத்தில் தமது முதுகலைப் பட்டத்துக்காகச் சமர்ப்பித்த ஆய்வாகும். தமிழிலக்கியங்களில் படைக்கப்பட்ட பெண் கதாப்பாத்திரங்களின் பண்புகள் எவ்வாறு தமிழ்ச் சிறுகதைகளில் இடம்பெறும் பெண்களின் பாத்திரங்களைப் பாதித்துள்ளன என்பதில் கவனக்குவிப்பு செய்துள்ளார். இவரது ஆய்வின் தலைப்பு '19702010 வரையிலான மலேசியத் தமிழ்ச் சிறுகதைகளில் பெண் பாத்திரப் படைப்பபு: பண்டை இலக்கியக் கோட்பாட்டு ஆய்வு' (Penggambaran Citra Wanita dalam Cerpen Tamil Malaysia, 1970-2010 Kajian Berasaskan Teori Arketaipal), என்பதாகும்.

இவ்வரிசையில் கிடைத்த மற்றுமொரு ஆய்வு, அம்மணி அய்யாவு (2012) என்பவருடையதாகும். ஜோகூர்த் தமிழ் எழுத்தாளர்களின் சிறுகதைகளின் கருப்பொருள்கள் பற்றிய ஆய்வு (1950 2010)' (Study of Themes of Short Stories by Tamil Writers from Johor (1950-2010)). "மிமெட்டிக்" (mimetic) கோட்பாட்டின் அடிப்படையில் சமூக வாழ்க்கை முறையை இவ்வாய்வில் மேற்கொண்டுள்ளார்.

## ஆய்வு முறை

ஆராய்ச்சியாளர் 'நூல் பகுப்பாய்வு முறையை' ஆராய்ச்சிக்கான முதன்மை வழிமுறையாகத் தேர்ந்தெடுத்துள்ளார். ஏனெனில், தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுகதைகளை ஆழமான ஆய்வுக்கு உட்படுத்த உள்ளடக்க ஆய்வையும் இம்முறை கொண்டுள்ளது (Peter Goodrich, 1986). உள்ளடக்க ஆய்வு முறையின் வழி இந்தச் சிறு கதைகளில் உட்பொதிக்கப்பட்ட பெண்ணியச் சிந்தனைகளைக் கண்டுபிடிக்க முடிகிறது. எனவே, ஆய்வு நோக்கங்களை அடைய மூலப் பேரவைக் கதைகளைக் களமாகக் கொண்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வில் பகுப்பாய்வு செய்வதற்குப் பண்புசார் (qualitative) அணுகுமுறை கையாளப்பட்டது (Cresswell, 1993). ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட சிறுகதைகளை ஆய்வாளரே தேர்ந்தெடுத்துக் கொண்டார்.

## கோட்பாடு

தீவிரவாதப் பெண்ணியத்திலிருந்து தோன்றிய கலாச்சாரப் பெண்ணியம், பெண்களின் சிறப்புப் பண்புகளை, அவர்களுக்கே உரிய ஆளுமைப்

பண்புகளாகப் போற்றுகின்றது (Alcoff, 1988). அந்த வேறுபாடுகள் பெண்களிடையே தனித்துவமான மற்றும் மேன்மையான உயரிய ஒழுக்கங்களைக் குறிக்கின்றன. இவ்வாறான கலாச்சாரப் பெண்ணியச் சிந்தனைக்கு வித்திட்டவர்களுள் மார்கரெட் ஃபுல்லர் குறிப்பிடத்தக்கவர். அவருடைய 'பத்தொன்பதாம் நூற்றாண்டில் பெண்கள்' (Woman in the Nineteenth Century, 1845) கலாச்சாரப் பெண்ணியப் பாரம்பரியத்தைத் தொடக்கியது. கலாச்சாரப் பெண்ணியம், பெண்களின் இயல்பான கருணை, வளர்த்தெடுத்தல், சாந்தம், உறவு நாடுதல், பிறர்பால் இரங்குதல் ஆகிய பண்புநலன்களில் கவனம் செலுத்துகிறது. இது ஆண்களுடனான சமத்துவம் மீதான முக்கியத்துவத்தை எதிர்க்கிறது; அதற்கு மாறாக, கலாச்சார ரீதியாக நியமிக்கப்பட்ட பெண்களுக்கே உரிய வேலைகளின் சிறப்பினைப் போற்றி வாதிடுகிறது. இவ்வகையான முன்னோக்கில், சகோதரத்துவம், ஒற்றுமை, அடையாளப் பகிர்வு ஆகியன பெண்களுக்கு அடிப்படைகளாகின்றன (Margaret Fuller, 1845).

கிருஷ்ணன் மணியம் கூற்றின்படி, 1990 களில் பெண்ணியச் சிந்தனைகள் தமிழ் இலக்கியத்தில் தலைகாட்டடத் தொடங்கியது. பெண்களின் இல்லத்துச் சிறைவாழ்க்கையிலிருந்து விடுதலைபெறும் ஒரு வாயிலாக இவ்விலக்கியப் படைப்புகள் வரவேற்கப்பட்டன. தமிழ்க்குடும்பங்கள் தந்தை ஆதிக்கத்திற்கு ஆட்பட்ட ஒரு கட்டமைப்பாக உள்ளன. பெண்கள் வெளிவுலகுக்குக் காலெடுத்து வைக்கவும், ஆண்களுக்குச் சமமாக உழைக்கவும், தொழில் பார்க்கவும் பெண்கள் கடந்த 50 ஆண்டுகளில் வெகுவாக முன்னேறியுள்ளனர். இதற்கு அடிப்படைக் காரணமாக அமைவது பெண்களுக்கு அளிக்கப்பட்ட சமக்கல்வியாகும் (Krishnan, 2013).

ஆணாதிக்கத்திற்குக் கட்டுப்பட்டுக் கிடந்த பெண்கள், தங்களுக்கே உரிய உயர்பண்புகளைக் கொண்டு எழும்போது, அவர்கள் பெண்ணியக் கோட்பாட்டின் பிரதிநிதிகளாகின்றனர். தங்கள் பாரம்பரியமும், ஆண்களைக் குடும்ப தலைவர்களாக ஏற்றுக் கொள்ளும் பண்பும், குடும்பத்துக்காக உழைக்கும் நேர்மையும் கொண்ட பெண்கள், கலாச்சாரப் பெண்ணியக் காவலர்களாகின்றனர் (Silllalee, 2015, p.103).

## ஆய்வுக் கண்டுபிடிப்புகள்

ஒன்பது சிறுகதைகள் பெண்கள் கொடுமைக்கு ஆட்படுதல், ஏற்றுக்கொள்ள இயலாத வேலைகளைச் செய்தல், புறக்கணிக்கப்படுதல், சித்திரவதைக்கு ஆளாகுதல் முதலிய குடும்ப வன்முறைகளைப் பற்றிப் பேசுகின்றன. மூன்று சிறு கதைகள் கணவர்களால் பாதிக்கப்படாத மனைவிகளைச் சித்தரிக்கின்றன.

வன்முறைக்கு ஆளாகும் பெண்களைக் கொண்ட இந்த ஒன்பது சிறு கதைகளில் உள்ள மனைவிக் கதாபாத்திரங்கள் கணவரால் மோசமாக நடத்தப்படுவதாக சித்தரிக்கப்பட்டுள்ளன. போதிய ஆற்றலோ பக்கபலமோ இல்லாத அபலைப் பெண்கள், தங்களை அடக்கி ஆளும் அதிகாரம் கொண்ட கணவன்மார்களிடம் சிக்கித் தவிக்கின்றனர். ஐந்து சிறுகதைகளில் மனைவியர்கள் பிறர் கோபத்துக்கும், சந்தேகத்திற்கும் புறக்கணிப்பிற்கும் ஆட்படுகின்றனர். மேலும் மூன்று சிறுகதைகளில், வாழ்வதற்குத் தேவைப்படும் உணவையோ பணத்தையோ பெற இயலாத பெண்களாகச் சித்தரிக்கப்படுகின்றனர். இன்னுமொரு சிறுகதை, தொடர்ந்து துன்பத்துக்கு ஆளான மனைவி, தன் கணவன் நோய்வாய்ப்பட்டு இறந்துபோக, அவர் விடுதலை பெற்றதை விவரிக்கிறது.

அடுத்துவரும் ஒரு சிறுகதையில், தகுதிகளைப் பெற்று, மேலும் கல்வி தொடர வேண்டும் என்ற வேட்கையுடன் இருக்கும் ஒரு மனைவியின் ஆசைகளை மதித்து நிறைவேற்ற மறுக்கும் கணவனைக் காண்கிறோம். மற்றுமொரு சிறுகதையில், தன் மனத்தையும் மனவெழுச்சியையும் உடலையும் தகாத முறையில் பயன்படுத்தும் ஆடவனைத் தன் கணவனாக ஏற்க மறுக்கும் மனைவி சித்தரிக்கப்படுகிறாள். இவ்வாய்வுக்

கட்டுரைக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கதையில், துன்புறுத்தப்பட்ட மனைவி, அவள் அன்றாடம் தன் குடும்ப மேன்மைக்காகச் செய்த தியாகங்கள் எதுவும் போற்றப்படாமலேயே இறந்து போகிறாள்.

இந்தச் சிறுகதையானது, 'அம்மா' என்ற தலைப்பில் திலகவதியால் எழுதப்பட்டது (பேரவைக் கதைகள் 20, 2005). மகள் புவனா, தன் அம்மா தேவியின் உடலருகே அமர்ந்து தாயின் கடந்த காலப் போராட்டங்களை எண்ணி ஆறுதல் அடைகிறாள். தேவி என்ற அந்தப் பெண்மணி தன் மனத்திற்குப் பிடித்த ஒருவரை மணந்து கொண்டு செல்வம் என்ற ஒரு ஆண்மகனையும் புவானா என்ற பெண் குழந்தையையும் பெற்றெடுத்த 47 வயது அடைந்து பிறகு இறந்துவிட்ட மனைவியாகக் கதையில் சந்திக்கின்றோம்.

தேவி, தன் கணவன் சொல்லுக்குக் கட்டுப்பட்ட அன்பான மனைவியாக வாழ்நாளைக் கழித்தவள். கல்வி அறிவு இல்லாத அவள், ஒரு தொழிற்சாலையில் கல்வியறிவு இல்லாததால் அவளுடைய தகுதிக்கும் அறிவுக்கும் ஏற்ற ஒரு வேலையைச் செய்து குறைந்த ஊதியத்தைப் பெற்றாள்.

தன் நிலையை உணர்ந்த தேவி, தன் மகளுடன் உரையாடும் போதெல்லாம், தன்னைப் போன்ற பெண்கள் படும் இன்னல்கள் பற்றிய கருத்துகளைப் பரிமாறிக்கொண்டாள். பெண்கள் கல்வி அறிவு பெறுவதோடு பணச் சுதந்திரமும் பெற்றிருக்க வேண்டும் என்ற கருத்தினை வெளிப்படுத்தியுள்ளாள். பெண்களுக்கு மனவுறுதி இன்றியமையாத ஒன்றெனக் கொண்டிருந்தாள். இதுபற்றித் தேவி கூறியதை புவனா நினைத்துப் பார்க்கிறாள்:

'பொம்பல பிள்ளைங்க எந்தச் சூழ்நிலையிலும் உடைஞ்சி போகக்கூடாது. அழுகையானாலும் அது நம்ம பலத்த காட்டக் கூடியதா இருக்கணும்'.

(திலகவதி, 2005, p. 126).

ஒரு மனைவியாக வாழ்நாளில் பல துன்பங்களைத் தேவி அனுபவித்துள்ளாள். முதலாவதாக, தன் கணவன் எப்போதும் தன்னை 'முட்டாள்' என்று திட்டித் தீர்த்துள்ளான். அவள் படிக்காத காரணத்தால், தனக்கு வெளியில் மதிப்பில்லை என்று கணவன் ஆதங்கப்படுவான். தான் மட்டும் ஒரு படித்த பெண்ணைத் திருமணம் செய்திருந்தால், அரசன் போல் வாழ்ந்திருப்பானாம். இதனால் அவள் மனம் மிகுந்த வெதனைக்குள்ளானது.

இருப்பினும், தன் கணவனைத் தானே காதலித்துத் திருமணமும் செய்து கொண்டவளாவாள்; இரண்டு குழந்தைகளுக்கும் தாயாகிவிட்டாள். தன் குழந்தைகள் முறையான கல்வி பெறுவதற்கு ஆவன செய்தாள். தனக்கு ஏற்பட்ட நிலை தன் பிள்ளைகளுக்கும் வரக்கூடாது; அவர்கள் சமுதாயத்தில் மதிக்கப்படுபவர்களாகக் கல்வியில் சிறக்க வேண்டும் என்ற வைராக்கியம் கொண்டாள். அதற்காக, தொழிற்சாலை ஒன்றில் வேலை செய்தாள். கணவனுடைய கடனை அடைக்கவும், கூட்டுக் குடும்பத்தில் ஏற்படும் செலவுகளைச் சமாளிக்கவும் ஒரு கலாச்சாரப் பெண்ணியப் பிரதிநிதியாகச் சமுதாயக் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு குடும்பப் பொறுப்புகளை ஏற்றுக் கொண்டாள். ஆயினும் தன் கணவனோ வீட்டில் உள்ள உறவுகளோ எந்த வகையான பாராட்டுச் சொற்களையும் தேவிக்கு வழங்கவில்லை. தேவி ஒரு இரும்புப் பெண்ணாக வலம் வந்திருக்க வேண்டும், ஆனால், அதற்கு மாறாகத் தன் கணவனை அவள் ஒரு போதும் மறுத்ததில்லை.

அவளுடைய போராட்டங்களின் உச்சமாக நிற்பது, அவளுடைய இரு குழந்தைகளின் தாய்மைக் காலமாகும். ஒரு கர்ப்பிணிப் பெண் பெற வேண்டிய எந்த ஒரு ஆதரவையும் கவனிப்பையும் தன் கணவன் தனக்குத் தந்ததில்லை என்ற தன் தாயின் நிலையைப் புவனா எண்ணிப் பார்க்கிறாள்.

'உனக்கு மாசமா இருந்தப்பகூட நல்ல சாப்பாடோ உடுப்போ வாங்கித் தந்ததில்லை. அந்தக் காட்டு வீட்டுல ராத்திரின்னு கூட பாக்காம ஒண்டியா விட்டுட்டுப் போயிருவாரு'.

(திலகவதி, 2005, p.122).

தேவி நன்றாக ஆடை அணிந்தபோது தன் தந்தையால் அதனைப் பொறுத்துக் கொள்ள முடிந்ததில்லை; வீட்டிலும் வெளியிலும் முடிவில்லாமல் வேலை செய்தாலும் நல்ல உணவு உண்ணக்கூடாது. நகைகளை அணிந்து கொள்வதற்குக் கூட தடை செய்யப்பட்டது. தேவி அனுபவித்த சித்திரவதை சமயங்களில் எல்லையை மீறியதும் உண்டு. ஒரு தடவை, தன் தந்தை தேவியின் 'தலை முடியைப் பிடித்துத் தரதரவென இழுத்து வந்து இராட்சத்தனமாய் தலையை தரையில் ஓங்கி அடித்தார் (திலகவதி, 2005, p.123), என்பதைச் சுட்டுகிறாள் புவனா.

தன் வேதனைகளிலிருந்து மீள்வதற்கும் சாய்ந்துகொள்வதற்கும் தன் அண்ணியின் தோள்களைச் சமயங்களில் தேவி நாடியதும் உண்டு. ஆறுதலுக்குப் பதிலாக அவள் பெற்றதெல்லாம் மேலும் வேதனைதான். வெந்த புண்ணில் வேல் பாய்ச்சினாற்போல் அண்ணியின் சொற்கள் அமைந்தன. அண்ணி கூறிய அந்தச் சொற்களை புவனா எண்ணி கோபம் கொள்கிறாள்.

'அவர் என்ன சின்னப் புள்ளையா, சொல்லித் திருத்தறதுக்கு! என்ன தண்ணி கொஞ்சம் கூட. மத்தபடி ரொம்ப நல்லவரு. நீங்கதான் கொஞ்ச நாளைக்கு எல்லாத்தையும் பாத்துக்கணும், உப்புச் சப்பில்லாமல் கூறினாள். இவளும் அம்மாவைப் போல ஒரு பெண்தான்! எப்படி இவளுக்கு இன்னொரு குடும்பத்தின் சுமைகளும் ஒரு பெண்ணின் மனதும் தெரியாமல் போனது?'

(திலகவதி, 2005, p.126).

தேவியின் போராட்டங்களில் மற்றுமொன்று, வீட்டிற்குத் தேவையான பணத்தைச் சம்பாதிப்பது ஆகும். தன் கணவர் வீட்டுச் செலவுக்கு எந்த உதவியும் செய்யாவிட்டாலும், வேண்டிய அளவு கடனை ஏற்படுத்தி வைத்திருந்தார். அக்கடன்களைத் தீர்க்க வேண்டிய சுமையையும் தன் தாய் தேவியே சுமந்தாள்.

எவ்வளவுதான் தான் வேதனை பட்டாலும், தன்னுடைய நிலை தன் மகளுக்கு வந்துவிடக்கூடாது என்பதில் தன் தாய் தேவி உறுதிபூண்டிருந்தாள். தன்னை நன்றாக வளர்த்து வழிகாட்ட அவள் ஒருநாளும் தளர்ந்ததில்லை. தன் கைச் செலவுக்குத் தன் தாய் கொடுத்த பணத்தைப் புவனா எண்ணிப்பார்க்கின்றாள். தான் உயர்கல்வி பெறவேண்டும் என்பதில் குறியாய் இருந்தாள்; அதன் விளைவாக விரைவில் புவனா ஒரு பட்டதாரியாக உள்ளாள். தன் தாய் அனைவருக்கும் செய்த தியாகங்களை எண்ணி, அவளிடம் போதிய அளவு அன்பு செலுத்தாத கணவர் (அவள் அப்பா) மற்றும் சுற்றத்தார் குறையை நினைத்து வருந்துகிறாள், புவனா.

தேவி எவ்வளவுதான் உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் உணர்ச்சி ரீதியாகவும் பாதிக்கப்பட்டிருந்த போதிலும், குடும்பக் கலாச்சாரத்தைப் பின்பற்றும் ஒரு பெண்ணாகவே இருந்தார். சித்திரவதைகளுக்கு இடையிலும், தன் கணவரின் கோரிக்கைகளுக்கு இணங்கியதோடு மட்டுமல்லாமல் கூட்டுக் குடும்ப உறவுகளின் தேவைகளையும் நிறைவு செய்தாள். எந்த வேளையிலும் அவள் ஒரு எதிராளி ஆனது இல்லை. பெண்ணுக்கே உரிய பணிந்து போகும் மனப்பான்மை, தேவியை ஒரு கீழ்படிந்துபோகும் மனைவியாகத் தோற்றுவிக்கிறது. 'ஆண்களோடு ஒப்பிடுகையில், பெண்களுக்கு அடிப்படை வேறுபாடுகள் இல்லை என்றாலும், சில நிலைகளில் ஆண்களை விட பெண்களே அதிகப் பரிணாம வளர்ச்சி அடைந்துள்ளனர், எனக் கலாச்சார பெண்ணியவாதிகள் நம்புகின்றனர். எடுத்துக்காட்டாகக் கலாச்சாரப் பெண்ணியமானது, பெண்களிடம் காணப்படும் அன்பு, வளர்த்தெடுக்கும் தன்மை, அகிம்சை, மனவலிமை ஆகிய குணங்கள் பெண்களுக்கே உரியன, எனக் கருதுகிறது (கிறீநீஷீயீயீ, 2006). இக்கலாச்சாரப் பெண்ணியக் கோட்பாட்டின் வெளிப்பாடாக 'அம்மா" எனும் இக்கதை அமைகிறது.

'பெண்களுக்கு ஏற்படும் உடற்காயங்களுக்கு, வல்லுறவு, வழிப்பறி, வாகனவிபத்து ஆகியவற்றை விட அதிகம் ஏற்படுத்துவது கணவனின் அடிவுதைகளேப. (Silllalee, 2017, 24). ஏறக்குறைய 50 விழுக்காட்டுத் திருமணமான

பெண்கள் தங்கள் கணவர்களால் துன்புறுத்தப்படுகின்றனர் எனக் கலிபோர்னியா சட்டத் துறை அலுவலகம் கூறுகிறது. மேலும் 30 விழுக்காட்டுப் பெண்களின் தற்கொலைகளுக்குக் கணவர்கள் அல்லது காதலர்கள் காரணமாகின்றனர் எனப் புள்ளிவிவரம் காட்டுகின்றன. இவை துள்ளிதமான விவரங்கள் அல்ல, என்றாலும் இந்நிலை ஒரு பதட்டத்தையும் விரைந்த செயற்பாட்டையும் வேண்டுகிறது' (McDonald, *1989).*

இக்கதையின்வழி தேவியின் நிலைப்பாட்டை அறிந்துகொள்ள முடிகிறது. தான் அனுபவித்த இன்னல்களையும் போராட்டங்களையும் எந்த ஒரு பெண்ணும், குறிப்பாகத் தன் மகள், அனுபவிக்கக் கூடாது என்பதில் தேவி உறுதியாக இருக்கிறாள். மகள் புவனா மனத்தில், பெண்கள் எப்போதும் தன்னம்பிக்கையோடு சுயகாலில் நிற்பதும் மட்டுமன்றி, எதிர்காலத்துக்குத் தேவையான பணச்சேமிப்பையும் கொண்டிருக்க வேண்டும், என்ற எண்ணத்தை விதைத்து விட்டாள். தேவி, தன் வாழ்க்கையில் பெறாத தாய்ப்பாசம், கல்வி, சிந்தனைச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் ஆகியவற்றைத் தன் மகள் புவானுவுக்குக் கொடுத்தாள். அவள் ஒரு நல்ல தாயாக இருந்ததோடு மட்டுமல்லாமல் நிபந்தனையற்ற அன்பையும் பொழிந்தாள். உயர்கல்வி வரையிலும் தன் மகள் படித்து வெற்றி பெறுவதற்கான பணச்செலவையும் அவளே தாங்கிக்கொண்டாள்.

## முடிவு

பேரவைக் கதைகளில் கணவனால் துன்புறுத்தப்பட்ட பெண்ணியக் கதைகளாக ஏழு சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. சுருக்கம் கருதி இவ்வாய்வுக் கட்டுரையில் 'அம்மா' என்ற தலைப்பில் அமைந்த ஒரு சிறுகதை மட்டுமே விவரிக்கப்பட்டுள்ளது. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதற்கிணங்க, இந்த ஒரு கதையே கணவனால் துன்புறும் பெண்களின் அவல நிலையையும் அதிலிருந்து விடுபட பெண்கள் எதிர்கொள்ளும் போராட்டங்களையும் காட்டுகின்றது. தமிழ்ப் பெண்களைக் கலாச்சாரப் பெண்ணியம் வெகுவாக உட்படுத்திய போதிலும். அக்கலாச்சாரத்தையும் காத்து மிதவாதப் பெண்ணியப் பெண்களாக, பாரதி கண்ட புதிய பெண்களாக அவர்கள் வீறுநடை போடுகின்றனர்.

## References


Alcoff, L.M. (2006). *Visible Identities.* Oxford: Oxford University Press.

Alcoff, L.M. (1988). Cultural Feminism versus Post-Structuralism: The Identity Crisis in Feminist Theory. *Signs: Journal of women in culture and society, 13(3),* 405-436.

Ammini Ayavoo. (2012). *Kajian tema cerpen-cerpen karya penulis-penulis Tamil Negeri Johor, (1950-2010).* (Unpublished Master's thesis): University Malaya, Kuala Lumpur.

Cresswell. J.W. (1993). *Research Design: Qualitative & Quantitative Approach.* London: Sage.

Krishanan Maniam. (2013). The Tamil literature and feminism. In: The 3rd SSEASR Conference, 3-6 June 2009, Bali, Indonesia.

Margaret Fuller. (1845). *Woman in the nineteenth century.* New York: Norton.

McDonald, K. A. (1989). Battered wives, religion & law: an interdisciplinary approach. *Yale Journal of Law & Feminism*, 2(2).

Pama Periasamy. (2014). *Gender Stereotype in selected Novels written by Ramani Chandran*. (Unpublished Master's thesis): University Malaya, Kuala Lumpur.

Peter Goodrich. (1986). *Reading the Law: A Critical Introduction to Legal Method and Technique.* U.K.: Blackwell Publishers.

Puspa Nathan Naharajah. (2014*). Wanita dalam Cerpen-cerpen R.Karthigesu:* (Unpublished Master's thesis). University Malaya, Kuala Lumpur.

Rajeswary Vairan. (2015). *Feminisme dalam novel-novel pada abad ke-21.* (Unpublished Doctoral Thesis): Universiti Pendidikan Sultan Idris, Tanjung Malim.

Ravindaran Marayal. (2012). *Penggambaran Citra Wanita dalam Cerpen Tamil Malaysia. 1970-2010: Kajian berasakan arketaipal.* (Unpublished Master's thesis): University Malaya, Kuala Lumpur.

Rinah Periasamy. (2014). *Cerpen N.Mageswary: Kajian Theory Feminism.* (Unpublished Master's thesis): University Pendidikan Sultan Idris, Tanjung Malim.

Silllalee (2017). "The Social Ill-Fames of Malaysian Cinema Andal", *Journnal of Tamil Peraivu*. (Vol.5 / pp.20-31).

Silllalee, S., Kandasamy. (2015). *Filem-filem Tamil di Malaysi:Pemerhatioan Terhadap Ketaksamaan Sosial*. Unpulished Phd Thesis. Faculty of Arts and Sains Social. University Malaya.

Thilagavathi. (2005). *Ammā.* In *Pēravaik Kataikaḷ* 20 (pp. 119-127). KL: PBTUM.

Thiruppathi, J. (2013). *Feminism in Prabanchan's Novels.* (Unpublished Doctoral Thesis): Tamilnadu: Manonmaniam University.